திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி திருநின்றவூர் நகராட்சி, பிரகாஷ் நகர், பாலாஜி நகர், எமரால்டு நகர் உள்ளிட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான S49 மினி பேருந்து சேவையை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பயணிகளுடன் பயணம் செய்தார். உடன் நகர் மன்ற தலைவர் உஷாராணி ரவி, ஆணையர் ஜீவிதா, எம்.டி.சி.ஆர்.எம். எட்வின், கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, தி. வை.ரவி, எஸ்.கமலக்கண்ணன், தெ.நாகராஜ், ஆர்.ரவி, சி.பாபு, வெங்கடேசன், உஷாராணி வெங்கடேசன், பி.எல்.ஆர்.யோகா, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

சமூக விஷத்தின் அடையாளம் ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க.!

ராகுல் காந்தி கடும் விமர்சனம்!

ஹரியானா, அக்.11-

சமூக விஷத்தின் அடையாளம் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க. என, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஹரியானா மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி புரன்குமார், துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம், ஒட்டுமொத்த காவல்துறை வட்டாரத்தையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

ஐ.பி.எஸ். அதிகாரியின் தற்கொலை மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த துயரமான சம்பவம், சாதிய பாகுபாட்டில் சமூகம் மோசமான நிலையில் இருப்பதை எதிரொலிப்பதாக வேதனை தெரிவித்துள்ளார். ஐ.பி.எஸ். அதிகாரியின் தற்கொலை, சாதிய அடிப்படையில் மனிதாபிமானம் நசுக்கப்பட்டு, ஆழமடைந்து வரும் சமூகத்தின் விஷத்தின் அடையாளம் என ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

மேலும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மீதான தாக்குதல் குறித்தும் குறிப்பிட்டுள்ள அவர், இது போன்ற சம்பவங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருவதையே காட்டுவதாகவும், பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ் வெறுப்புணர்ச்சியை விதைத்து, மனுதர்மத்தை விஷத் தன்மையுடன் சமூகத்தில் பரப்பி வருவதாகவும் காட்டமாக விமர்சித்துள்ளார்.

மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவாக்கம்!

மலைப்பகுதியில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா விடியல் பயணம்!

தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக்.11-

மலைப்பகுதியில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் இனி மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தது. இதன்மூலம் மாற்றுத்திறனாளிகள், அவருடன் வரும் ஒரு துணையாளர் மலைப்பகுதிகளில் இயக்கப்படும் சாதாரண கட்டண பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையில் அறிவிக்கப்பட்ட இந்த திட்டத்தை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு நேற்று அரசாணை வெளியிட்டுள்ளது.

இதனால் மாற்றுத் திறனாளிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில்

கலைஞர் 102வது பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

நல உதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, அக்.11-

திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா நடைபெறவுள்ளது. விழாவில் கலந்து கொண்டு, நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

இன்று (11.10.2025 -சனிக்கிழமை) மாலை 6.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரம், நல்லவன்பாளையத்தில் திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக் கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன் தலைமை வகிக்கிறார்.

மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், ஒன்றிய செயலாளர்கள் த.ரமணன், பெ.கோவிந்தன், பொதுக்குழு உறுப்பினர் து.கென்னடி, மாநகர பகுதி செயலாளர்கள் விஜி (எ) சு. விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம். மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் சம்மந்தனூர் மணி, மாவட்ட பிரதிநிதி கள் எம்.ஜி.சுப்பிரமணி, சி.பாபு, இல.சரவணன், ஒன்றிய பொருளாளர் பா.ஏழுமலை, ஒன்றிய துணை செயலாளர்கள் சுபாசெல்வமணி, யுவராஜ், நாக.சங்கர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.பாஷா, மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.தே.முருகையன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநகர பகுதி செயலாளர் லயன் பா.ஷெரீப் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

பொதுக் கூட்டத்தில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா. ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.சௌந்தர ராசன், செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ்.

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ். முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.துவேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்தபாண்டியன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபாணி, க. பிரபாகரன், கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகர்,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, பா.முருகையன், எம்.சீனுவாசன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதி மனோஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார், மாநகர நிர்வாகிகள் மு. கருணா மூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குணசேகரன், அ. கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதி கள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் எஸ். பாபாஜான் நன்றி கூறுகின்றார். முன்னதாக ஆ.தே.முருகையன் குழுவினரின் நவீன நாடகம் நடைபெறவுள்ளது.

மேயர் திருமதி ஆர்.பிரியா, அண்ணாநகர் மண்டலம், வார்டு105ல் அரும்பாக்கம், ரசாக் தோட்டம் பிரதான சாலை, முரளிகிருஷ்ணா திருமண மண்டபத்தில் நேற்று (10.10.2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினைப் பார்வையிட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கான தீர்வினை வழங்கினார். இந்நிகழ்வில், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாமன்ற உறுப்பினர் ந.அதியமான் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த குடும்பங்களுக்கு நிதி உதவி!

தலைவர் – முதல்வரின் அறிவுறுத்தல்படி வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்ற மாதம் 27ஆம் தேதியன்று, கரூரில் எதிர்பாராத கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்தவர்களை, சந்தித்து நலம் விசாரித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண தொகையினை வழங்கி வருகிறார். நேற்று முன்தினம் 2 வது நாளாக காயமடைந்து சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பியவர்களின் வீடுகளுக்குச் சென்று வி.செந்தில் பாலாஜி, நிவாரண நிதியை வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், எம்.எல்.ஏக்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, கே.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், மாநகர செயலாளர் எஸ்பி.கனகராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் உடன் சென்றனர்.

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் – இன்று

திருவாரூரில் மாபெரும் கருத்தரங்கம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

அணியின் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

திருவாரூர், அக்.11-

கழக சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு சார்பில் இன்று திருவாரூரில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெறுகிறது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மற்றும் பலர் சிறப்புரையாற்று கின்றனர் என்று கழக சிறு பான்மையினர்நலஉரிமைப்பிரிவு செயலாளர்டாக்டர்அ.சுபேர்கான்தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில்அன்றும்!.இன்றும்! என்றும்! சிறுபான்மையின மக்களின்காப்பான்தி.மு.க. எனும் தலைப்பில் இன்று (11.10.2025 - சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சொந்த ஊரான திருவாரூரில் உள்ள பொன்தமிழ் திருமண மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன். எம்.எல்.ஏ. சிறுபான்மை யினர் நலன் மற்றும்வெளிநாடுவாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி.சா.மு.நாசர், தமிழ்நாடுசிறுபான்மையினர்நலவாரியத் தலைவர் அருட்தந்தை ஜோ. அருண், வாரியத்துணைத்தலைவர்இறையன்பன் குத்தூஸ் மற்றும் தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர்நவாஸ்கனிஎம்.பி. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் கழகசிறுபான்மையினர்நல உரிமைப்பிரிவின் மாநில தலைவர்,துணைத்தலைவர், இணைச்செயலாளர்,மாநில துணைச் செயலாளர்கள், திருவாரூர்,தஞ்சைவடக்கு, தஞ்சை தெற்கு,

தஞ்சை மத்திய மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் கழக மாவட்டங்களைஉள்ளடக்கிய சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட தலைவர்,துணைத்தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாநகரம், ஒன்றியம், நகரம்,பகுதி மற்றும் பேரூர் கழகநிர்வாகிகளுடன்இஸ்லாமிய, கிறிஸ்துவ, புத்தம், ஜைனம் மற்றும் பல சிறுபான்மை யின அமைப்புகளின்பிரதிநிதிகளும்பங்கேற்கவுள்ளனர். எனவே சுற்றுவட்டாரப்பகுதிகளில் உள்ள சிறுபான்மையின அமைப்பின்பிரதிநிதிகளும் மற்றும்பொதுமக்களும்பங்கேற்குமாறுகேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 38/சிபிடி, பேரவை இணைப்பு எண்.26)திட்ட நிர்வாகிகள் தேர்தல், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி வருகிற 25.10.2025 அன்று கழகத்தின் தணிக்கைக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் திரு. அ.சரவணன் அவர்களை மேலிடப் பார்வையாளராகக் கொண்டும் கீழ்க்கண்ட தேர்தல் ஆணையாளர்களைக் கொண்டும் நடைபெறும்.

தேர்தல் நடத்தப்படும் திட்டங்கள்	தேர்தல் ஆணையாளர்கள்
வடசென்னை திட்டம்	திரு. **ஜெ.விஜயகுமார்** பேரவைஇணைப்பொதுச் செயலாளர் **தேர்தல் ஆணையாளர்** கைபேசி எண். 9444883555 திரு. **என்.தனசேகரன்** பேரவைச் செயலாளர், **துணை ஆணையாளர்** கைபேசி எண். 9444145005
விழுப்புரம் திட்டம்	திரு. **ஜோசப் நெல்சன்** திருச்சி மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் கைபேசி – 6382716377

தேர்தல் அட்டவணை, தேர்தல் விதிமுறைகள் ஆகியவை தேர்தல் ஆணையாளர்களால் தனியாக வெளியிடப்படும்.

கலைஞரகம்
சென்னை – 17
நாள்: 10.10.2025

மு.சண்முகம்,Ex.MP
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட மங்களம், எருக்குவாய், காரணி, புதுப்பாளையம் ஆகிய கிராமங்களுக்கு அரசு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வே.ஆனந்தகுமார், மு.பகலவன், வே.அன்புவாணன், ப.செ.குணசேகரன் உள்பட நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.